**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 11 December 2021

# ‘மூன்று அம்சங்களில் சிங்கப்பூர் மையமாக விளங்கலாம்’

உலகளவில் பொதுச் சுகாதாரத்துக்கு மையமாக விளங்கி, மக்களின் ஒட்டுமொத்த நலனுக்கும் உலகத்தின் நன்மைக்கும் சிங்கப்பூரால் பங்காற்றமுடியும் என்று சமூக அறிவியலாளரான நொவெலின் ஹேசர் கூறியுள்ளார். இணையப் பாதுகாப்புக்கு மின்னிலக்க மையமாக உருவெடுத்தும் சிங்கப்பூர் உலகிற்குப் பங்காற்றலாம். மேலும், கரியமில வெளியேற்றத்தைக் குறைக்கும் அல்லது முற்றிலும் நிறுத்தும் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்கும் நிதி மையமாகவும் சிங்கப்பூர் உருவாகலாம் என்று டாக்டர் ஹேசர் குறிப்பிட்டார். இவ்வாறு முன்னுதாரணமாக இருந்து சிங்கப்பூர் உலகிற்கு உதவலாம் என்று அவர் கூறினார்.



இணையப் பாதுகாப்பு, பொது சுகாதாரம், நீடித்த நிலைத்தன்மை ஆகிய அம்சங்களில் சிங்கப்பூர் மையமாக விளங்கலாம் என்று சமூக அறிவியலாளர் டாக்டர் நொவெலின் ஹேசர் கூறியுள்ளார்.

**கோப்புப் படம் / ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

‘சிங்கப்பூரும் பலதரப்பட்ட ஆளுமை முறையும்: நமது எதிர்காலத்தை நிலைநாட்டுவது’ எனும் தலைப்பில் இடம்பெற்ற உரை நிகழ்ச்சியின் இறுதி அமர்வில் டாக்டர் ஹேசர் பேசினார். கொள்கை ஆய்வுக் கழகத்தின் நாதன் விரிவுரை தொடர் பிரிவின்கீழ் இவர் விரிவுரை வழங்கினார். கொவிட்–19 கொள்ளை நோய்ப் பரவல் காலத்தில் உலகின் பொதுச் சுகாதாரப் பாதுகாப்பில் சிங்கப்பூர் முக்கியப் பங்கு வகித்துவந்துள்ளதாக டாக்டர் ஹேசர் சொன்னார்.

5ஜி தொழில்நுட்பத்தைப் பின்பற்றும்போது இணையத் தாக்குதல்களுக்கான வாய்ப்புகளும் அதிகரிக்கும் என்பதைச் சுட்டிய இவர், இணையப் பாதுகாப்பில் சிறந்த வழிமுறைகளை உருவாக்கி அவற்றை ஒருமைப்படுத்துமாறு தொழில்துறைத் தலைவர்களைக் கேட்டுக்கொண்டார். மேலும், ஆசியாவில் நீடித்த நிலைத்தன்மை வளர்ச்சிக்கு நிதி சார்ந்த தீர்வுகளை வழங்குவதன் மூலம் சிங்கப்பூரால் முக்கிய பங்காற்ற முடியும் என்றும் டாக்டர் ஹேசல் குறிப்பிட்டார்.

உலகம் பல மாற்றங்களைச் சந்தித்துவரும் நிலையில் பலதரப்பட்ட ஆளுமை முறையை மீண்டும் கடைப்பிடிப்பதன் அவசியத்தைப் பற்றியும் டாக்டர் ஹேசல் பேசினார். இவர், சிங்கப்பூரைப் பற்றிய ஆய்வுக்காக எஸ். ஆர். நாதன் வல்லுநர் திட்டத்தின்கீழ் கொள்கை ஆய்வுக் கழகம் தேர்ந்தெடுத்துள்ள 10வது நபர் இவர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.